# கல்முனை கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 09 இருமொழி மூலக் கற்கை மாணவர்களின் இடைவிலகலை இழிவளவாக்குதல் தொடர்பான ஆய்வு

# A STUDY ON MINIMIZING STUDENT DROPOUTS IN GRADE 9 CLASSES OF BILINGUAL EDUCATION IN THE SCHOOLS IN KALMUNAI EDUCATIONAL ZONE

OUSL Library.
Donated by.
Head ISTE
Foc. of Education

R. MOHAMED AZMIE
Reg. No: 413276456

OPEN UNIVERSITY
72884

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் கல்வி முதுமாணிப் பட்டக் கற்கை நெறிக்கான பகுதித் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு இவ்வாய்வு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2013/14

CLASS NO
ACCESSION NO 72884

72884

## ஆய்வுச் சுருக்கம்

இவ்வாய்வின் பிரதான நோக்கமானது தரம் 6ல் இருமொழிமூலக் கற்கை வகுப்புக்களில் சேரும் மாணவர்கள் தரம் 9 இல் இடைவிலகல்களுக்கு இட்டுச் செல்லும் தனியாள், பாடசாலை, குடும்பக் காரணிகளை இனங்கண்டு இடைவிலகலை இழிவளவாக்குவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதாகும். இப் பிரதான நோக்கத்தை அடைவதற்காக நான்கு குறிக்கோள்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அவையாவன: 1. மாணவர்கள் இரு மொழி மூலக் கற்கை நெறியில் இணைவதற்கு செல்வாக்குச் செலுத்தும் தனியாள், பாடசாலை, குடும்பக் காரணிகளின் பொருத்தப்பாட்டினைக் கண்டறிதல். 2. ஆங்கில மொழிமூலக் கற்றல்-கற்பித்தலின் போது மாணவர்கள் எதிர் கொள்ளும் இடர்பாடுகள் தொடர்பாக ஆசிரியர்களின் புலக்காட்சியைக் கேட்டறிதல். 3. இரு மொழி மூலக் கற்கை நெறியிலிருந்து மாணவர்கள் விலகுவதற்கு பங்களிப்புச் செய்யும் தனியாள், பாடசாலை, குடும்பக் காரணிகளின் செல்வாக்கினை மதிப்பிடல். 4. இருமொழி மூலக் கற்கை நெறியிலிருந்து விலகியதற்குச் செல்வாக்குச் செலுத்திய குடும்பம், தனியாள், பாடசாலைக் காரணிகள் தொடர்பாக விலகிய மாணவர்களின் பெற்றார்களின் புலக்காட்சியை அறிதல். இவ்வாய்வு கல்முனை கல்வி வலயத்திலுள்ள இருமொழி மூலக் கற்கை வகுப்புக்களை கொண்ட பாடசாலைகளை மையமாகக் கொண்டதாகும். இவ்வாய்வானது தொகைசார்ந்த ஆய்வு அணுகுமுறையைப் பின்பற்றி விபரண அளவீட்டு ஆய்வு முறையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மொத்த குடித்தொகை முந்நூற்று முப்பத்தொரு பேர்கள் ஆகும். இவர்கள் படையாக்க மாதிரி எடுப்பு முறையினைக் கொண்டு இருநூற்று எழுபது மாணவர்களும், இருபத்து ஒன்பது ஆசிரியர்களும், முப்பத்து இரண்டு பெற்றார்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். லிக்காட்டின் அளவிடை முறையினைப் பயன்படுத்தி மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பெற்றார்களுக்குமாக நான்கு வினாக்கொத்துக்கள் தயாரிக்கப்பட்டு அவர்களிடமிருந்து தனித்தனியாக தரவுகள் சேகரிக்கப்பட்டன. அனைத்து தரவுகளும் MS Excel, SPSS16.0 போன்ற மென்பொருட்கள் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டு அவற்றின் விலகல், நியம விலகல், மீடிறன், வீச்சு என்பன கணிப்பிடப்பட்டன. இவ்வாய்வின் பிரதான கண்டறிதல்களாக மாணவர்கள் இருமொழி மூலக்கற்கை நெறிக்கு இணைவதற்கு சுயவிருப்பம், சகபாடிகள், மற்றும் பெற்றார் விருப்பு, சமூக அடுக்காக்கம் என்ற காரணிகள் காணப்படுகின்றன. இம்மாணவர்களின் கற்றல்-கற்பித்தல் தொடர்பாக ஆசிரியர்களின் புலக்காட்சியில் ஆங்கில மொழியாளுமை அனேகமான மாணவர்களிடத்தில் குறைவாக உள்ளதென்றும், மாணவர்கள் இக்கற்கை நெறியினை விட்டு விலகுவதற்கு ஆங்கில மொழியறிவின் தேக்கமே பிரதான காரணமுமாகும். மேலும் பெற்றார்களின் கவனயீனமும் மாணவர்களின் விலகலுக்கு குறிப்பிடத்தக்களவு காரணமாக உள்ளது. ஆய்வுக்கான விதந்துரைகளாக, இரு மொழி மூலக் கற்கை தொடர்பான விழிப்புணர்வை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் ஏற்படுத்துவதன் மூலமும், பாடசாலையின் முகாமைத்துவ குழுவினர்கள், வலய, கோட்ட மட்ட அதிகாரிகளின் ஆலோசனைகள் பெற்று மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் வழிகாட்டல்கள் வழங்குவதினூடாக இம் மாணவர்களின் தொடர்ச்சியான கற்றலை உறுதிப்படுத்தலாம் என்பதே ஆகும்.

**Abstract**

Purpose of this study is to find out individual, family and school's factors on dropout rates in the bilingual education and identify means for minimize the dropouts of the bilingual students who join in grade 6 and some of them left out in grade 9. To achieve the main purposes, four specific objectives are set up. Those are; 1. Identifying the suitability and the individual, school, and family factors which plays key role in the students to join bilingual education. 2. Acquiring the perception of the teachers on the issues faced by the students during the teaching-learning process of bilingual medium. 3. Evaluating the individual, school and family factors which play key role in the dropping out of students from bilingual education. 4. Identifying the perception of the parents whose children have dropped out from bilingual education due to family, individual and school factors. This study based on the schools which have bilingual medium in the Kalmunai Education Zone. This study has been done on Quantitative Research Approach and Descriptive Survey method. The total number of population included in this study consists of three hundred and thirty one. Two hundred and seventy Students, Twenty nine Teachers and Thirty two Parents are selected for this study using cluster sampling method. Four Questionnaires are prepared based on the Likert's Scale method and given to the students and parents and data are collected separately. All these data are analyzed using software like MS Excel and SPS16.0, the deviation, frequency, standard deviation and range are calculated. The main findings of the study are students' interest, influence of peer group and parents' wish to join the bilingual medium. From the perception of the teachers, it is found out that the lack of fluency in the English Language of the students is the main factors for leaving the bilingual education. Further, the carelessness of the parents also plays key role in dropping out from this medium. It is recommended that the continuation of the students in this medium could be confirmed by providing awareness about the bilingual medium of education to the students, Teachers and Parents and also by getting advice from the School Management Committee, Zonal and Divisional Education officers to provide guidance to the students and parents.